1978 ஏப்ரல் 6]

மலையாள பாடப் புத்தகங்கள்

*823 வினா— திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழி மைனாரிட்டி மாணவர்களான மலையாள அரிசன மாணவர்களுக்கு மலையாள பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ?

(ஆ) அரிசன மலையாள மாணவர்களுக்கு மலையாள பாடப் புத்தகம் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) கேரள அரசினரால் வெளியிடப்பட்ட மலையாள மொழிப் புத்தகங்கள் தமிழ் நாட்டிலுள்ள மலையாள மொழியினைப் பயிற்றுவிக்கும் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 இல் மலையாள மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் அரிசன மாணவர்களுக்கு புத்தகங்கள் குறித்த காலத்தில் வழங்க இயலவில்லை. எனினும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் மாணவர்களுக்குப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. திருச்சி ஆர் சௌந்திரராஜன் : இன்றைய தினம் கல்வி கற்கும் மாணவர்களில் பல பேர் திராவிட மொழிகளைத் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். அப்படிக் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு எல்லா மொழிகளையும் கற்றுக் கொடுக்கும் வகையில் எல்லா மொழிகளிலும் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; மூலக் கேள்வி மலையாள மொழியில் பாடங்களைப் பயிலுகிற அரிசன மாணவர்களைப் பற்றியது.

விளவங்கோடு வட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர்கள்

824 வினா—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவிலுள்ள பாடசாலைகளில் பலவற்றில் மலையாள ஆசிரியர்கள் அமர்த்தப் படாமல் தமிழ் ஆசிரியர்களே மலையாள மாணவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கின்றனர் என்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ?

(ஆ) மலையாள ஆசிரியர்களை நியமிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது விளவங்கோடு வட்டத்தில் உள்ள எல்லா அரசு துவக்க, நடுநிலை, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மலையாள ஆசிரியர்களே மலையாளப் பிரிவுகளுக்கு நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

*825 வினு— திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந் நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளிலும், பெரும்பான்மை யான பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டம் 1980-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது ;

திரு. சி. மாணிக்கம் ; தமிழ் நாட்டில் பெரிய நகரங்களாக இருக்கும் நகரங்களில் ஒன்ருக இருக்கும் திருச்சி நகரில் செயல் பட்டு வரும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக மத்திய அரசு மாநில அரசுக்கு ஏதேனும் மானியம் கொடுத்துள்ளதா ? எவ் வளவு தொகை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி திருச்சி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் எந்நிலையிலுள் ளது என்பது. எந்நிலையிலுள்ளது என்பதை விளக்கிவிட்டேன்.

திரு. கூ. சு. முருகேசன் ; இந்தப் பாதாளச் சாக்கடைத் திட் டம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? இந்தத் திட்டத்தினுல் திருச்சியிலுள்ள குழாய்கள் எல்லாம் பறிக்கப்பட்டு தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் சீக்கிரம் முடிக்க முடியுமா ? பொன்மலை நகராட்சிக்கும், ஸ்ரீரங்கம் நகராட்சிக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி வடிகால் திட்டத்திற்கு அரசு 1970 ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. அப் போது திட்டத்தின் மதிப்பீடு 285.06 லட்சம் ரூபாய். அனுமதிக் கப்பட்ட தொகை 396.35 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக் கிறது. இத்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் பெரும்பான்மை யான பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இறுதியாக எல்லா வேலை களும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிந்துவிடும்